பக்கங்கள் 17+6

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 19 புதன்கிழமை 04.09.2024 | அதிர்வு 34

## 4 போக்குவரத்துச் சங்கங்கள் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு



வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குத்

04

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



### ரணிலுக்கு ஆதரவான மொட்டுவின் பெருமளவு உறுப்பினர்களின் பங்கேற்புடன்

# நாளை உதயமாகின்றது புதிய அரசியல் கூட்டணி

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பெருந்தொகையான உறுப்பினர்களின் பங்கேற்புடன், அரசியலில் புதிய திசையை நோக்கிய பரந்த புதிய அரசியல் கூட்டணியின் அறிமுகம் நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது என்று சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

எதிர்காலத்துக்கு ஏற்ற வகையில் புதிய அரசியல் கூட்டணியை ஆரம்பிக்கும் நோக்கில் இந்தக் கூட்டணி உருவாகியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பத்தரமுல்லையில் இன்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

04

# தேர்தல் விதிமுறைகளை மீறிய மூவர் புதுக்குடியிருப்பில் கைது!




முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கைவேலி பகுதியில் தேர்தல் விதிமுறைகளை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் மூவர் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைவேலி பகுதியில் தேர்தல் விதிமுறைகளை மீறி மக்களை ஓர் இடத்தில் ஒன்றுதிரட்டி காணி இல்லாதவர்களுக்குக் காணி வழங்குவதாகவும், வேலைவாய்ப்புகள் பெற்றுக்கொடுப்பதாகவும் வாக்குறுதிகளைக் கூறி மக்களிடம் 200 ரூபா பெறப்பட்டு ஐக்கிய தேசியக் கட்சியினரால் படிவம் பூரணப்படுத்தப்பட்டு வந்திருந்தது.

அதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் அலுவலகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் புதுக்குடியிருப்பு பொலிஸார் அவர்களிடம் இருந்த படிவங்களைப் பறிமுதல் செய்ததுடன் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த இருவர் மற்றும்

04



# வடக்குக் கிழக்கின் அபிவிருத்திக்காகத் தாமதிக்காது சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை கூட்டுவோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மன்னாரில் தெரிவிப்பு.

யுத்தத்தால் பெருமளவு பாதிக்கப்பட்ட வடகிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்காக வளமான வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்குக் கடந்த காலங்களில் இருந்த எந்த ஒரு தலைவருக்கும் முடியாமல் போயிருக்கின்றது.

எனவேதான் ஜனாதிபதியானவுடனே வடக்குக் கிழக்கு மாகாணங்களை மையமாகக் கொண்டு, யுத்தத்தின் பின்னரான பாரிய அபிவிருத்திக்காக சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை கூட்டி, வடக்கையும் கிழக்கையும் மையமாகக் கொண்ட பாரிய அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுப்போம். ஏனைய மாகாணங்களுக்கும் அதன் பிரதிபலன் செல்லக்கூடிய வகையில் அபிவிருத்தி பணிகளை முன்னெடுப்போம் .

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

2024 ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த மக்கள் வெற்றிப் பேரணி தொடரின் 32 ஆவது கட்டம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸதலைமையில் நேற்று (03) மன்னாரில் மிக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

சனத் தொகை மற்றும் புள்ளி விவரவியல் திணைக்களம் 2022 ஆம் ஆண்டு மேற்கொண்ட கணக்கெடுப்பின் ஊடாக, அந்தந்த மாகாணங்களில் தேசிய உற்பத்திக்காக அவர்கள் வழங்குகின்ற பங்களிப்பையும் கணக்கிட்டு இருக்கின்றார்கள். அதில் 43.4 வீதத்துக்கு மேல் மாகாணத்தில் கிடைக்கின்றது. வட மாகாணத்தின் பங்களிப்பு 4.1 வீதமாகவும், கிழக்கு மாகாணத்தின் பங்களிப்பு 5.2 வீதமாகவும் காணப்படுகின்றது. ஐக்கிய மக்கள் சக்தி அரசின் ஊடாக இந்தப் பங்களிப்பை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, தரவுகளையும் தகவல்களையும் மையமாகக் கொண்டு முழு நாட்டையும் அபிவிருத்தியின் பால் விட்டு செல்வோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கும், மீனவர்களுக்குமான சலுகைகள் 50 கிலோ கிராம் உடைய உர மூடை ஒன்றை சலுகை விலை அடிப்படையில் 5000 ரூபாவிற்கு வழங்குவதோடு, விவசாயிகளின் விவசாய கடனை இரத்து செய்வோம் என எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கியூ ஆர் கோட் முறையூடாக ஓட்டோ சாரதிகளுக்கும், பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து வாகன உரிமையாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும், சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்களுக்கும் நிவாரண அடிப்படையில் எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுப்போம்.

சகல வசதிகளையும் கொண்ட விவசாய நடவடிக்கைகளுக்காகவும் சகல வசதிகளையும் கொண்ட மீன்பிடித் தொழிலுக்காகவும் சக்தியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம். சட்ட விரோதமான முறையில் எமது கடல் எல்லைக்குள் பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபடுகின்றவர்கள் குறித்து இராஜதந்திர முறையில் அதற்கான தீர்வைப் பெறவும் நடவடிக்கை எடுப்போம் என்ற எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கடந்த அரசில் நிறுத்தி வைக்கப்பட்ட வீடமைப்பு திட்டத்தை மீண்டும் உருவாக்குவோம். வீட்டுக் கடன்களை வழங்கி வீடமைக்கும் யுகத்தை உருவாக்குவோம். இன, மத, குல, வகுப்பு பேதங்கள் இன்றிக் காணிகள் இல்லாதவர்களுக்கு காணிகளை வழங்கும் ‘கம் உதாவ’ திட்டத்தை மீண்டும் கொண்டு வருவோம்.

பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களுக்கு முதலிடம் வழங்கப்படும். இளைஞர்களுக்காகவும் விசேடமான வேலை திட்டங்களை முன்னெடுப்போம்.

மன்னாருக்கும் ஏனைய மாவட்டங்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான போக்குவரத்து தொடர்பை மையமாக வைத்து பாரிய அபிவிருத்தி திட்டத்தை முன்னெடுக்க முடியும். சுற்றுலாத்துறை மற்றும் உற்பத்தி தொழிற்துறை உருவாக்கி பலமிக்க அபிவிருத்தியை கொண்டு வர முடியும்.– என்றார்.








# முப்படையினருக்கும் அடிப்படை சம்பளம் அதிகரிப்பு

2025 ஜனவரி 01 முதல் அரச சேவையின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை உயர்த்துவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு அறிக்கையின்படி, முப்படைகளிலும் பணியாற்றும் உறுப்பினர்களின் அடிப்படை சம்பளமும் அதிகரிக்கப்படவுள்ளது.

இதன்படி முப்படைகளின் தரம் III நிலை சாதாரண சிப்பாய்களினதும் அடிப்படை சம்பளம் 10,660 ரூபாவினாலும், தரம் II க்கு 10,960 ரூபாவினாலும் தரம் I இற்கு 11,260 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

லான்ஸ் கோப்ரல் / சார்ஜென்ட் / ஏயார்மேன் பதவி நிலைகளின் தரம் III க்கு 11,560 ரூபாவினாலும் தரம் IIக்கு 11,860 ரூபாவினாலும் தரம் I க்கு 12,160 ரூபாவினாலும் அடிப்படை சம்பள அதிகரிப்பு வழங்கப்படும். அதன் விசேட தரச் சேவைக்கு அடிப்படை சம்பளம் 12,460 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது.

கோப்ரல் / நாயக நெவி / கோப்ரல் பதவிகளில் தரம் III க்கு 12,460 ரூபாவினாலும் தரம் II க்கு 12,760 ரூபாவினாலும் தரம் ஒன்றுக்கு 13,130 ரூபாவினாலும் அதன் விசேட தர சேவைக்கு அடிப்படைச் சம்பளம் 13,500 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

சார்ஜென்ட் / சாதாரண நிலை அதிகாரி / சார்ஜென்ட் பதவிகளில் தரம் IIIக்கு 13,500 ரூபாவினாலும், தரம் IIக்கு 13,870 ரூபாவினாலும், தரம் Iக்கு 14,240 ரூபாவினாலும் அதன் விசேட தர சேவைக்கு 14,610 ரூபாவினாலும் அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது.

ஸ்டாப் சார்ஜென்ட் / சாதாரண அதிகாரி / பதவி நிலை சார்ஜென்ட் ஆகிய பதவிகளின் தரம் III க்கு 14,610 ரூபாவினாலும் தரம் IIக்கு 14,240 ரூபாவினாலும் தரம் I க்கு 15,105 ரூபாவினாலும் அதன் விசேட தர சேவைக்கு 15,600 ரூபாவினாலும் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது.

அதிகார ஆணையிடும் அதிகாரி II / தலைமை அதிகார அதிகாரி / ஆணையிடும் அதிகாரி பதவிகளின் தரம் III க்கு 16,095 ரூபாவினாலும், தரம் II க்கு 16,590 ரூபாவினாலும் தரம் I க்கு 17,085 ரூபாவினாலும் அதன் விசேட தர சேவைக்கு 17,580 ரூபாவினாலும் அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது.

ஆணையிடப்பட்டும் அதிகாரி I / இடைநிலை அதிகாரிகள் / தலைமை தலைமை பதவிகளின், தரம் III க்கு 19,725 ரூபாவினாலும், தரம் II க்கு 20,385 ரூபாவினாலும் தரம் I க்கு 21,045 ரூபாவினாலும் அதன் விசேட தர சேவைக்கு அடிப்படை சம்பளம் 21,705 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

கெடட் அதிகாரிகளின் அடிப்படை சம்பளம் 13,500 ரூபாவினாலும், இடைநிலை அதிகாரிகளின் அடிப்படைச் சம்பளம் 13,870 ரூபாவினாலும் 2 ஆவது லெப்டினன்ட் (கெடட்) / ப்ளைட் அதிகாரி (கெடட்) பதவிகளின் அடிப்படை சம்பளம் 19,725 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

2ஆவது லெப்டினன்ட் (கெடட் அல்லாதவர்) / ப்ளைட் அதிகாரி (கெடட் அல்லாதவர்) பதவிகளின் அடிப்படை சம்பளம் 23,025 ரூபாவினால் அதிகரிக்கப்படும்.

லெப்டினன்ட் / உப லெப்டினன்ட் / ப்ளைட் அதிகாரி பதவிகளின் அடிப்படை சம்பளம் 28,855 ரூபாவினாலும் எக்யூப்மென்ட் கண்ட்ரோலர் பதவிக்கான அடிப்படை சம்பளம் 30,220 ரூபாவினாலும் கெப்டன் ஃ லெப்டினன்ட் / ப்ளைட் லெப்டினன்ட் பதவிகளுக்கான அடிப்படை சம்பளம் 37,045 ரூபாவினாலும் அதிகரிக்கப்படும்.

மேஜர் / லெப்டினன்ட் கொமாண்டர் / ஸ்கொட்ரன் லீடர் பதவிக்கான அடிப்படை சம்பளம் 42,505 ரூபாவினால் அதிகரிக்கப்படும்.

லெப்டினன்ட் கேர்ணல் / கொமாண்டர் / விங் கொமாண்டர் பதவிக்கான அடிப்படை சமபளம் 44,175 ரூபாவினால் அதிகரிக்கப்படும்.

கேணல்/ கெப்டன்/ குரூப் கெப்டன் பதவிக்கான அடிப்படை சம்பளம் 58,095 ரூபாவினால் அதிகரித்துள்ளது.

பிரிகேடியர் / கொமாண்டர / எயார் கொமாண்டர் பதவிகளுக்கு அடிப்படை சம்பளம் 62,555 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் / ரியர் அட்மிரல் / எயார் வைஸ் மார்ஷல் பதவிகளுக்கான அடிப்படை சம்பளமம் 71,000 ரூபாவினால் அதிகரிக்கப்படும்.

லெப்டினன்ட் ஜெனரல் / வைஸ் அட்மிரல் / எயார் மார்ஷல் பதவிக்கான அடிப்படை சம்பளம் 76,300 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஜெனரல் / அட்மிரல் / எயார் ஷீப் மார்ஷல் பதவிக்கான அடிப்படை சம்பளம் 84,700 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

# தலைமன்னார் – இராமேஸ்வரம் இடையேயான கப்பல் சேவையை மீள ஆரம்பிக்க கடலில் ஆய்வு




**(ந.லோகதயாளன்)**

தலைமன்னார் – இராமேஸ்வரம் இடையேயான கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிக்க அக்னி தீர்த்தக் கடலில் இந்தியத் தரப்பால் மணல் ஆய்வு இடம்பெறுகின்றது.

இலங்கை தலைமன்னார், இந்திய தனுஷ்கோடி இடையேயான கப்பல் போக்குவரத்து 1914ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகள் நடைபெற்று வந்தது. 1964இல் அடித்த கோரப்புயலின் காரணமாக இந்தியாவின் தனுஷ்கோடி நிலை குலைந்ததால் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

இவ்வாறு இயற்கைத் தாண்டவத்தால் அழிவடைந்த துறைமுகம் ஊடான போக்குவரத்து மீண்டும் தொடங்கப்பட்டபோதும் இலங்கையின் உள்நாட்டுப் போர் காரணமாக முற்றிலும் நிறுத்தப்பட்டது.

இந்தக் கப்பல் பயணத்தை மீண்டும் தொடங்கி தலைமன்னார் – தனுஷ்கோடி இடையே ஆன்மீக சுற்றுலாத் துறையை மேம்படுத்துவது தொடர்பாக முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

இதனையடுத்து தலைமன்னார் – இராமேஸ்வரம் கப்பல் சேவையை ஆரம்பிக்கக்கூடிய சூழல் அப்பகுதியில் காணப்படுகின்றது. அதற்கேற்ற வகையில் துறைமுகத்தை அண்டிய பகுதிகளிலும் கப்பல் செல்லும் வழித் தடத்திலும் மண்வளம் சீராக உள்ளதா என்ற ஆய்வுகள் தற்போது இந்தியத் திசையில் இடம்பெறுகின்றது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### நாளை உதயமாகிறது...

“இலங்கையில் நடுநிலை அரசியல் சித்தாந்தங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகளின் பங்கேற்பினால் உருவாக்கப்பட்ட பரந்த கூட்டமைப்பு நாளை காலை 9 மணிக்கு வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் பல கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து இந்தக் கூட்டணியைக் கட்டியெழுப்புகின்றனர். எதிர்காலத்துக்கு ஏற்ற வகையில் புதிய அரசியல் கூட்டணியைத் தொடங்குவதே இலக்கு.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையான உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் எதிர்காலத்தில் எடுக்கும் அரசியல் நிலைப்பாடு தொடர்பில் இந்நாட்டு மக்களுக்கு ஒரு சந்தேகம் இருந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து செயற்பட்டனர். அவர்கள் இடதுசாரி நடுநிலைவாதிகள்.

இவர்கள் அனைவரும் எதிர்காலத்தில் அதே நடுநிலையான அரசியல் கருத்தை முன்வைத்து இலங்கை மக்களுக்கு சேவையாற்றப் பாடுபடுவார்கள். அதற்கு அரசியல் மேடை தேவைப்பட்டது. அந்த மேடையை உருவாக்கும் நோக்கில் இந்தப் பரந்த கூட்டணியை உருவாக்க முடிவு செய்யப்பட்டது. எதிர்வரும் தேர்தல்களில் ஒரே மாதிரியான யோசனைகள் மற்றும் கொள்கைகளுடன் குழுவாக இணைந்து செயற்படுவதே இதன் இலக்கு.

ஜனாதிபதித் தேர்தல் யுத்தம் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ள நிலையில், எங்களுக்கான நீண்ட கால நிலையான அரசியல் அடித்தளத்தை உருவாக்குவதே எமது அடுத்த இலக்காகும். சமமான எண்ணம் கொண்ட ஒரு குழு ஒன்று கூடுகிறது. எதிர்காலத்தில் ஐக்கிய முன்னணியில் ஆர்வமுள்ளவர்கள் எம்முடன் இணையலாம். இந்தக் கூட்டணியில் உள்ள அனைவரும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக உழைத்து வருகின்றனர். இது எதிர்காலவாதிகளின் குழு. எதிர்கால அரசியல் நடப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழு. சில அரசியல் கட்சிகளின் ஜனநாயகம் குழப்பமாகிவிட்டது. எனவே, நவீன ஜனரஞ்சகவாதிகளுடன் கூடிய ஜனநாயக அரசியல் கட்டமைப்பை உருவாக்குவதே எமது நம்பிக்கை.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான பழைய வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

தேர்தலுக்கு முந்தைய ஆண்டு வாக்காளர் பட்டியலின்படி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதுதான் அந்த முடிவின் மையக்கரு. தற்போதைய சூழ்நிலையில், பழைய வேட்புமனுக்கள் மற்றும் பழைய வாக்குப்பட்டியலின் கீழ் வாக்குப்பதிவு நடத்தினால், கிட்டத்தட்ட ஒன்பது இலட்சம் பேர் வாக்களிக்கும் உரிமையை இழக்க நேரிடும். வாக்களிக்கும் உரிமையைப் போலவே இளைஞர் சமூகமும் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டும்.

இது மனித உரிமை மீறல், ஜனநாயக மீறல். இந்த விடயங்களைக் கருத்தில் கொண்டு, சட்ட திருத்தம் மற்றும் தேர்தல் வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இதற்கு எந்தச் சட்டத் தடையும் இல்லை.” – என்றார்.

### 4 போக்குவரத்து...

தங்கள் முழு ஆதரவையும் வழங்குவதாக 4 பிரதான போக்குவரத்துச் சங்கங்கள் அறிவித்துள்ளன.

அகில இலங்கை ஓட்டோ சாரதிகள் தொழிற்சங்கம், தேசிய Taxi app ஓட்டோ தொழிற்துறை சங்கம், ஐக்கிய பயணிகள் போக்குவரத்து சேவை வல்லுநர்கள் சங்கம், மேல் மாகாண ஓட்டோ சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் சங்கம் ஆகிய நான்கு பிரதான போக்குவரத்துச் சங்கங்கள் ரணிலுக்கான ஆதரவை அறிவித்துள்ளன.

### தேர்தல் விதிமுறைகளை...

வீட்டு உரிமையாளர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையம் அழைத்து செல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# புதுக்குடியிருப்பு சந்தையில் திடீர் சுற்றிவளைப்பு! பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்கள் மீட்பு!!

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு சந்தைப் பகுதியில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின்போது சுகாதாரத்துறையினரால் பாவனைக்கு உதவாத பெருமளவு உணவுப் பொருள்கள் மீட்கப்பட்டன.

புதுக்குடியிருப்பு நகரில் அமைந்துள்ள சந்தைப் பகுதியைப் புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் மற்றும் பிரதேச சபையினர் இணைந்து திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர்.

இந்தப் பரிசோதனை நடவடிக்கையில் பாவனைக்கு உதவாத வகையில் இருந்த மரக்கறிகள், மீன்கள், இறால், பழங்கள், உப்பு என்பன விற்பனையாளர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்களை வைத்திருந்த விற்பனையாளர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.

புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பி.சத்தியரூபன் உள்ளிட்ட சுகாதாரப் பரிசோதகர்கள், பிரதேச சபையினர் இணைந்து குறித்த சுற்றிவளைப்பு பரிசோதனை நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர்.











## நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அமைதி தேர்தல் சாத்தியமா?

ஜனாதிபதித் தேர்தல் சூடு பிடித்து விட்டது. வாக்களிப்புக்கு இன்னும் 17 நாள்களே உள்ளன. இரண்டு வார காலமே பிரசாரத்துக்கு எஞ்சி உள்ளது.

இதுவரை நடந்த எட்டு ஜனாதிபதித் தேர்தல்களோடும் ஒப்பிடுகையில் இந்த ஒன்பதாவது தேர்தல் முற்றிலும் வேறுபாடானது. முன்னைய தேர்தல்களில் பெரும்பாலும் போட்டி இரண்டு பிரதான வேட்பாளர்களுக்கும் இடையில்தான். அதனால் வாக்கு எண்ணிக்கை கூட முதல் சுற்றுடன் முடிந்துவிடும்.

ஆனால், இம்முறை அப்படி அல்ல. மூன்று, நான்கு எனப் பல முனைப் போட்டி. அதனால் பிரசாரமும் தீவிரம்.

இலத்திரனியல் ஊடகங்களைத் தாண்டி, சமூக ஊடகங்களும் முன்னெப்போதும் இல்லாத மாதிரி அதிகம் பங்களிக்கும் தேர்தல் பிரசாரம் இது.

சமூக ஊடகப் பிரசாரங்கள் தீவிரமாக இருக்கும் களத்தில், வன்முறை வெடிக்கவும் பரவவும் வாய்ப்புகளும் ஆபத்துக்களும் அதிகம்.

ஆயினும், தெய்வாதீனமாக இம்முறை நிலைமை இதுவரை கட்டுக்குள்தான் உள்ளது.

இருக்கும் ஜனாதிபதியின் முரட்டுப் பிடிவாதத்தினால் இந்த நாட்டில் ஒரு பொலிஸ்மா அதிபர் இல்லாமல்தான் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகின்றது. புதிய ஜனாதிபதியும், சில சமயங்களில் புதிய ஜனாதிபதியின் பின்னர் புதிய அரசமைப்பு கவுன்ஸிலும் பதவிக்கு வந்த பின்னரே பதில் பொலிஸ்மா அதிபர் நியமனமாகும் வாய்ப்பு ஏற்படும் என்னவோ...?

ஆயினும், முன்னைய தேர்தல்களோடு ஒப்பிடுகையில் இந்தத் தேர்தலில் தேர்தல் வன்முறைகள் இதுவரையில் திருப்தி தரும் விதத்தில் கட்டுப்பாட்டில் உள்ளன. தேர்தல் விதிமுறை மீறல்கள் பற்றிய முறைப்பாடுகள் குவிந்த வண்ணம் இருந்தாலும், தேர்தல் வன்முறைகள் கட்டுப்பாட்டுக்குள்தான் உள்ளன.

ஆனால், நிலைமை இப்படி அமைதியாக நீடிக்கும் என்று நம்புவதற்கு இல்லை என்று சில தரப்புக்கள் முற்கூட்டியே எச்சரிக்கின்றன.

போட்டி மிகக் கடுமையாக இருப்பதால் கடைசி நேரத்தில் வாக்குகளை சுருட்டுவதற்காக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படலாம், வன்முறைகள் கட்டவிழ்ந்துள்ளன என்ற பிரசாரத்தை இலகுவாக சமூக ஊடகங்கள் மூலம் பரப்பி, பதற்றத்தை ஏற்படுத்தும் சதித்திட்டங்கள் கூட அரங்கேறலாம் என முன்னெச்சரிக்கைகள் விடுக்கப்படுகின்றன.


போட்டி மிக நெருக்கமானது என்பதால் சிறுபான்மையினர் தரப்பில் இருந்தும் சுருட்ட கூடிய வாக்குகளையும் இயன்ற அளவில் சுவீகரிப்பதற்காக பிரதான வேட்பாளர்களின் தரப்புக்கள் முழு முனைப்புடன் நிற்கின்றன.

இத்தகைய பெரும்பான்மை - சிறுபான்மை தரப்புகள் இடையே வன்முறைகளைத் தூண்டி, பரபரப்பை ஏற்படுத்தி, பதற்றத்தை உருவாக்கி, நிலைமையைக் குழப்பி, தங்களுக்கு வாக்குகளைச் சுருட்டவும், மற்றைய தரப்புகளுக்கு வாக்கு விழாமல் தடுக்கவும் சில பிரிவுகள் கடைசி நேரத்தில் சமூக ஊடகங்கள் மூலம் காய்களை நகர்த்தும் சதித்திட்டங்களுக்கும் இடம் இருப்பதாக அஞ்சப்படுகிறது.

பலமுனை போட்டி என்பதனால் இம்முறை இரண்டாம் சுற்று வாக்கு எண்ணிக்கை தவிர்க்க முடியாததாகும். முதல் சுற்று வாக்கு எண்ணிக்கை விவரம் வெளியாகி, இரண்டாம் சுற்று எண்ணிக்கைக்கு நேரம் இழுபட, குழப்பங்களும், வன்முறைகளும் வெடிக்க வாய்ப்பு இருப்பதாகவும் எச்சரிக்கப்படுகிறது.

இவற்றை எல்லாம் தாண்டி இந்தத் தேர்தல் ஒப்பேற வேண்டி உள்ளது.

அந்த வகையில் வன்முறை இல்லா - அல்லது குறைந்த - தேர்தலாக இதை நடத்தி முடிப்பது அனைவருக்கும் மிகச் சவாலான பணியாகத்தான் இருக்கும்.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555



# மன்னாருக்குப் பெருமை சேர்த்த வீரர்களுக்கு கௌரவிப்பு நிகழ்வு

(வாஸ் கூஞ்ஞ)

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டிகள் கடந்த வாரம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெற்றன.

இதில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 13 கல்வி வலயங்களைச் சார்ந்த ஆயிரத்து 200 பாடசாலைகள் பங்குபற்றியிருந்தன.

இதில் மன்னார் கல்வி வலயம் மூன்றாவது தடவையாக முதலாம் இடத்தைப் பெற்று சாதனைப் படைத்துள்ளது.

2018 ஆம் ஆண்டு முதல் தடவையாக இவ்வாறான விளையாட்டுப் போட்டியில் முதலாம் இடத்தையும் 2023 ஆம் ஆண்டு இரண்டாவது தடவையாக முதலாம் இடத்தையும் தற்போது 2024 ஆம் ஆண்டு மூன்றாவது தடவையாக தொடர்ச்சியாக முதலாம் இடத்தையும் மன்னார் கல்வி வலயம் பெருமை சேர்த்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதை முன்னிட்டு வெற்றியீட்டிய வீரர்களை மன்னார் கல்வி வலயம் கௌரவிக்கும் முகமாக திங்கள் கிழமை (02) காலை இவர்கள் மன்னார் நகரத்திலிருந்து மன்னார் கல்வி வலயம் வரை பேண்ட் வாத்திய இசையுடன் அழைத்துச் செல்லப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வுக்கு மன்னார் வலயப் பணிப்பாளர் செல்வி ஜீ.டீ.தேவராஜா, மன்னார் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் பி.ஞானராஜ், ஏ.பிரேம்தாஸ் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி நிர்வாக அதிகாரிகள், நானாட்டான் மற்றும் மன்னார் கோட்டக் கல்வி அதிகாரிகள், ஏனைய கல்வித் திணைக்களங்களைச் சேர்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர் ஆலோசகர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், அசிரியர்கள் மற்றும் விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.





# மட்டக்களப்பு - ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் வாக்களிப்பு!

(பழுவூரான்)

ஏறாவூர்ப் பொலிஸ் நிலையத்தில் இன்று புதன்கிழமை (04) காலை 8.30 மணியளவில் ஆரம்பமான தபால்மூல வாக்களிப்பு தற்போது மிகவும் சுமூகமாக நடைபெற்று வருகின்றது.

உதவித் தெரிவத்தாட்சி அலுவலரின் மேற்பார்வையின் கீழ் தபால் மூல வாக்களிப்பு ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

ஏறாவூர்ப் பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் பொலிஸ் உத்தியோகத்தர் உள்ளிட்டோர் வாக்களித்தனர்.

பொலிஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையத்தில் கட்சிகள் சார்பில் பிரதி நிதிகளும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தபால் மூல வாக்களிப்புச் செயற்பாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மிகவும் ஆர்வத்துடன் வாக்களித்தனர்.







# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் திருவிழா இன்று ஆரம்பம்!

(பழுவூரான்)

இலங்கையின் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாகக் கருதப்படும் கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று புதன்கிழமை (04) அதிகாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கல்நந்தி புல்லுண்டு போர்த்துக்கீசரை உதைத்து கல்லாகிய அற்புத திருத்தலமாகவும், தானாகத் தோற்றம் பெற்ற ஆலயமாகவும், கிழக்கு மாகாணத்தில் தேரோடும் ஆலயம் என்னும் பெருமை கொண்டதாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் விளங்கி வருகின்றது.

ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்த குருக்கள் தலைமையில் மஹோற்சவம் ஆரம்பமானது.

மூலமூர்த்திக்கு அபிஷேக பூசையுடன் விசேட பூசை இடம்பெற்றதனைத் தொடர்ந்து கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை ஆலயத்தைச் சூழ வலம் வந்து கொடிச்சீலைக்கு விசேட பூசைகள் இடம்பெற்றதுடன், வேதபாராயணத்துடன மங்கள வாத்தியம் முழங்க மணியோசைகளின் மத்தியில் பக்தர்களின் அரோகரா ஓசையுடன் கொடியேற்றம் நடைபெற்றது.

இதனையடுத்து தம்பத்துக்கு விசேட அபிஷேகம் இடம்பெற்றதுடன், பூசைகள் இடம்பெற்று சுவாமி உள்வீதி வலம்வரும் நிகழ்வு இடம்பெற்றது.

தேர்த்திருவிழா எதிர்வரும் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது. 23 ஆம் திகதி தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது.






# கிண்ணியா குறிஞ்சாக்கேணி பாலத்தை நிர்மாணிக்க அமைச்சரவை அனுமதி

(அஸ்ஹர் ஆதம் )

திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா குறிஞ்சாக்கேணி வீதியின் பாலத்தை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை மேற் கொள்ள அண்மையில் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சவூதி அரேபியாவின் உதவியுடன் நிர்மாணிக்கப்படவுள்ள இந்தப் பாலத்துக்கான திதியை அபிவிருத்திக்கான சவூதி நிதியம் வழங்கவுள்ளது.

அபிவிருத்திக்கான சவூதி அரேபிய நிதியத்தின் அனுசரணையுடன் வீதிக் கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் பதுளை– செங்கலடி வீதி அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் எஞ்சியுள்ள நிதியின் மூலம் இந்தப் பாலம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இதற்கான விலை முறி கோரப்பட்டிருந்த நிலையில் இதற்காக 9 விலை முறிகள் கிடைக்கப்பெற்றிருந்தன. தனியார் கம்பனிக்கு இதை வழங்க போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் அமைச்சரவைக்கு சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

குறிஞ்சாக்கேணி மக்களதும் கிண்ணியா மக்களதும் மிக நீண்டகாலத் தேவையாகவும் கோரிக்கையாகவும் இருந்த இப்பாலம் புனரமைக்கப்படாமையால் கடந்த 2021 ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் திகதி இடம்பெற்ற படகு கவிழ்ந்த சம்பவத்தால் 4 மாணவர்கள் உட்பட 6 பேர் உயிரிழந்த சம்பவம் நாட்டில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பாலம் தொடர்பாக இம்மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் உட்பட ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் குரல் எழுப்பி வந்தனர். இதன் விளைவாக 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி அப்போது வீதி அபிவிருத்தி நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சராகவிருந்த நிமில் லன்ஸாவினால் இதன் புனரமைப்பு பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டாது. எனினும் இப்பணிகளும் இடைநடுவில் கைவிடப்பட்டன.

இப்போது இதற்கான நிதியை வழங்க சவூதி அரேபியா முன்வந்ததையடுத்து இதற்கான புனரமைப்புப் பணிகள் மிகவிரைவில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன. இதற்கான ஒப்பந்தத்துக்கான அனுமதியையே அமைச்சரவை அண்மையில் வழங்கியுள்ளது.



# நூல் வெளியீட்டு விழா!

ஹஸ்பர் ஏ.எச்"

பர்ஹான் முஸ்தபா எழுதிய "மரக்கல மீகாமன்" ரொபர்ட் நொக்ஸின் வரலாற்று புனைகதை நூல் வெளியீட்டு விழா ஞாயிற்றுக் கிழமை மூதூர் பேர்ள் கிரேன்ட் மண்டபத்தில் நடுத்தீவு வலுவூட்டல் மற்றும் நலன்புரி சங்கத்தினால் வெளியீடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கலாநிதி றவூப் ஸெய்ன் மற்றும் நூல் திறனாய்வாளராக எழுத்தாளரும், ஆய்வாளருமான சிறாஜ் மஸ்ஹூர், ஆகியோர் கலந்து கொண்டனர்.பெருந்திரளான வாசகர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வை அஷ்ஷேஹ் என்.சியாத் தலைமை தாங்கியதோடு, வெளியீட்டு அமைப்பின் தலைவர் எஸ்.எம்.முஜீப் பங்கேற்று நேர முகாமைத்துவத்தின் அடிப்படையில் சிறந்த முறையில் நெறிப்படுத்தினார். நூலின் முதல் பிரதியினை நூலாசிரியரின் தாயார் சபியா உம்மா மற்றும் பாரியார் ஹிதாயா பர்ஹான் வழங்கி வைக்க தொழிலதிபர் வைத்தியர் லு.ஜெஸ்மின் பெற்றுக் கொண்டார்கள்.

# ரணில் தான் இன்றும் என்றும் ஜனாதிபதி!

## கல்முனையில் இணைப்பாளர் இராஜேஸ்வரன் தெரிவிப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் இன்றும் என்றும் ஜனாதிபதி. அதில் சந்தேகமில்லை. எனவே தமிழ் மக்கள் பொன்னான வாக்குகளை வீணாக்காமல் வெற்றி பெறும் குதிரைக்கு வாக்களித்து பங்காளராகுங்கள்.

இவ்வாறு ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேச இணைப்பாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான முருகேசு இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நேற்று (03) நற்பிட்டி முனையில் இடம்பெற்ற பிரச்சார முன்னோடி கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் பணிமனை வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவிருப்பதை ஒட்டி மாதர் சங்கங்கள் கிராம அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்து அவரது இல்லத்தில் முன்னோடிக் கூட்டத்தை நடத்தினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றிபெற வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும். சில வேளை ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்தால் முழு நாடும் தோல்வியடையும். மீண்டும் வரிசை யுகம் உருவாகும்.

எமது மக்களின் அமோக ஆதரவுடன் ரணில் மீண்டும் ஜனாதிபதி ஆவார்.



எமது மாவட்டத்தில் உள்ள தமிழ் பிரதேசங்கள் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. அதனை சீர் செய்ய வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவான பின்னர் வரிசையுகத்துக்கு முடிவுகட்டினார். பொருளாதாரத்தை மேம்படுத்தத் திட்டங்களை வகுத்தார்.

இன்று ரூபாவின் பெறுமதி வலுவடைந்து வருகிறது. பொருள்களின் விலைகளும் குறைந்துள்ளன. சுற்றுலாப்பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளது. எமது அரச தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வும் வழங்கப்படவுள்ளது.

எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டை ஆளவேண்டியது கட்டாய தேவையாகும். இன்னும் ஐந்தாண்டுகளுக்கு அவரின் தலைமைத்துவம் இருந்தால் இந்நாடு நிச்சயம் முன்னேறும். சிலவேளை ரணில் விக்கிரமசிங்க தோற்றால் அது தனி மனிதனுக்குரிய தோல்வி அல்ல, நாட்டின் தோல்வியாகும். அதுமட்டுமல்ல, மீண்டும் வரிசை யுகம் உருவாகும்.

இது தேர்தல் காலம் என்பதால் சில ஜனாதிபதி வேட்பாளர்கள் அதை வழங்குவேன், இதை வழங்குவேன் என உறுதிமொழி வழங்கலாம். ஆனால் எதுவும் நடக்கப்போவதில்லை. நடைமுறைக்கு சாத்தியமான உறுதிமொழிகளை ஜனாதிபதி வழங்கியுள்ளார். எனவே, அவர் எமது மக்களுக்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எனது பூரண ஆதரவை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு வழங்குவதாக முடிவெடுத்துள்ளேன்.

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் படும் துன்பங்கள் கொஞ்ச நஞ்சம் அல்ல. தொடர்ச்சியாக எமது மக்களை ஏமாற்றிக் கொண்டு ஒரு சில அரசியல்வாதிகள் தங்களுடைய சுயலாபங்களை அடைந்தவையே மிச்சம். எல்லா மாவட்டங்களிலும் ஒப்பிடும் பொழுது அம்பாறை மாவட்ட தமிழ்ப் பிரதேசங்கள் அனைத்தும் பின் தங்கியே காணப்படுகின்றன.

எதிர்காலத்தில் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களை அங்கு வசிக்கின்ற மக்களே ஆள வேண்டும். அவர்களுக்கான சகல விதமான முடிவுகளையும் அவர்களே எடுக்க வேண்டும். எதிர்கால சிந்தனை அவ்வாறு இருந்தால் மாத்திரமே இளைஞர்களின் தொழில் வாய்ப்புகளும் சரி அபிவிருத்தியிலும் சரி கொள்கையிலும் சரி எந்தவிதமான குறுக்கீடுகளும் இல்லாமல் சிறந்த முடிவுகள் எட்டப்படும்.

ஆகவே இவற்றைக் கருத்தில் கொண்டு நமது மக்களுக்கான வாய்ப்பாக நடைபெறுகின்ற ஜனாதிபதி தேர்தலை பயன்படுத்துவதை எதிர்பார்க்கின்றேன்.- என்றார்.

# மாதனை கற்பகபிள்ளையார் ஆலய புனராவர்த்தன மகாகும்பாபிசேகம்

பருத்தித்துறை மாதனை கற்பகபிள்ளையார் ஆலய புனராவர்த்தன நவகுண்டபட்சஷ மகாகும்பாபிசேகப் பெரும் சாந்தி விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 6.49 மணி முதல் 8.23 மணி வரையிலான சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இதற்கான கர்மாரம்பம் 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 5.30 மணி தொடக்கம் ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது.

பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நாளை (05) வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறும்.

இந்தக் கும்பாபிசேகத்தை மாதனை கற்பக பிள்ளையார் கோயில், கண்ணகை அம்மன் கோவில் ஆகியவற்றின் குருக்களான வேதசிவாகம வித்தியபூசணம் சிவஸ்ரீ சிதம்பர கிருஷ்ணமூர்த்தி பிரதமகுருவாக இருந்து நடத்தி வைப்பார்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளுரை நிகழ்த்துவார்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# வடமராட்சி கிழக்கு பிரதேச பண்பாட்டு பெருவிழா!

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள அனுசரணையில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகமும், பிரதேச கலாசாரப்பேரவையும் இணைந்து நடத்திய வடமராட்சி கிழக்கு பிரதேச பண்பாட்டுப் பெருவிழா நேற்று (03) இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் கு.பிரபாகரமூர்த்தி தலைமையில் பிரதான நுழைவாயிலில் இருந்து விருந்தினர்கள் மாலை அணிவித்து மண்டபம் நோக்கி வரவேற்கப்பட்டனர். மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வு காலை 09 மணியளவில் ஆரம்பமானது.

பண்பாட்டுப் பெரு விழாவில் அரங்க திறப்பு, நடேச கௌத்துவம், கிராமிய பாடல்கள், ஓகன் இசை, சிவதாண்டவம், சிந்துநடைக்கூத்து, நாட்டுக் கூத்து, கலைஞர் கௌரவிப்பு போன்ற கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபனும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணத்தினுடைய பண்பாட்டலுவல்கள் அலகு பிரதிப் பணிப்பாளர் லாகினி நிருபராஜ், வடமாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஓய்வு நிலை ஆணையாளர் வல்லிபுரநாதர் பத்மநாதன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட செயலக சிரேஷ்ட கலாச்சார உத்தியோகத்தர் சுகுணாலினி விஜயரத்தினம், மூத்த கலைஞர்களான கலைச்சாரம் செல்லையா பரமானந்தம், அண்ணாவியார் அந்தோனிப்பிள்ளை பிலிப்பையா ஆகியோரும் கலந்து கொண்டனர்.









# தேர்தலுக்குக் கோடி கோடியாகக் கொட்டும் அநுர மக்களுக்கு எதுவுமே இதுவரை செய்யவில்லை!

## குற்றஞ்சாட்டுகிறார் றிசாட் எம்.பி.

(கே.வசந்தன்)

அநுரகுமார திஸாநாயக்க தேர்தலுக் காகக் கோடி கோடியாகப் பணம் கொட்டுகிறார். அப்படியான அநுரகுமார வால் கடந்த காலத்தில் ஏன் ஒரு சின்ன உதவியாவது மக்களுக்கு செய்ய முடியாமல் போனது.

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், வன்னி மாவட்ட நடாளுமன்ற உறுப்பின ருமான றிசாட் பதியுதீன் தெரிவித் துள்ளார்.

வவுனியா, வைரவபுளியங்குளத்தில் நேற்று (03) இடம்பெற்ற ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தொவித்த தாவது,

தமிழ், முஸ்லிம், சிங்களம் என எல்லா மக்களும் இருக்கிறீர்கள். எங்களுக்குள் பேதம் இல்லை. சஜித் பிரேமதாஸ ஆட்சியில் எல்லோரும் சேர்ந்து தான் பய ணிக்கப் போகின்றோம். எங் களது சஜித் பிரேமதாஸ களவெடுக்கா தவர். பொய் சொல்லாதவர். களவெடுப்பவர் களை பாதுகாக்காதவர். நாட்டின் மீது பாசம் உள்ளவர். இரவு பகலாக உழைப் பவர். ஏழைகள், விவசாயிகள், மீனவர் கள், தொழிலாளர்கள், மாணவர் சமூகம் என எல்லோர் மீதும் இரக்கம் கொண்டவர்.

இவருடன் போட்டியிடும் ஏனைய வேட்பாளர்களை தனித்தனியாக சிந்தித்து பாருங்கள். ரணில் விக்கிரம சிங்க ஆறு முறை பிரதமராக, ஒரு முறை ஜனாதிபதியாக இருந்தவர். பல முறை எதிர்கட்சி தலைவராக இருந் திருக்கிறார். நாடாளுமன்றத்தில் பல பதவிகளில் அலங்கரித்தவர்கள் இந்த தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

எதிர்கட்சி தலைவராக சஜித் பிரேமதாஸ இருந்த போது ஒரு நாளும் அவர் வீட்டில் தூங்கிக் கொண்டு இருக்க வில்லை. ஒவ்வொரு நாளும் நாடாளு மன்றத்தில் எழுந்து நின்று மக்களது பிரச்சினைகளைச் சுட்டிக் காட்டி அரசையே தட்டிக் கேட்ட ஒரே தலைவர்.

சுதந்திரத்துக்குப் பின்னர் சஜித் பிரமேதாஸ மட்டும்தான் எதிர்கட்சித் தலைவராக இருந்து பணம் சேர்ந்து கிராமம் கிராமமாகச் சென்று மாண வர்களது குறை தீர்த்த வரலாறு உண்டு.

அமைச்சரவையில் இருந்து மக்க ளைக் கொலை செய்து அந்த இலா பத்தை தமது பைகளுக்குள் போட் டவர்களும் இருக்கிறார்கள். இன்னும் சிறையில் இருக்கிறார்கள். முன்னாள் சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக் வெலவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்த போது



இந்த ஜனாதிபதியும், ஜனாதிபதியுடன் இருக்கின்ற இந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்றுமே செய்யாத ஒரு இராஜாங்கமும், இன்னும் பலரும் சேர்ந்து ஹெகலிய ரம்புக்வெலவைக் காப்பாற்ற கை உயர்த் தினார்கள்.

புற்று நோய்க்கு வழங்கும் ஊசி மருந்துக்குள் மருந்தை போடாமல் இந்தியாவில் இருந்து கொண்டு வந் தோம் என்று பொய் சொல்லி அதற்குள் தண்ணீரை ஊற்றி அதனை புற்று நோயாளர்களுக்கு செலுத்தி பலரையும் கொலை செய்த பெரும் பாவிதான் ஹெகலிய. அதானால்தான் சிறையில் உள்ளார்.

ஆனால் சஜித் பிரேமதாஸ 300 இற்கு மேற்பட்ட வைத்தியசாலைகளுக்கு சென்று நோயளர்களுக்கு தேவையான விடயங்களைச் செய்து அவர்களது உயிர்களை பாதுகாக்க உதவியவர்.

சஜித் பிரேமதாஸவால் எதிர்கட்சியில் இருந்து 400 பாடசாலைகளுக்குச் சிமாட் வகுப்பறைகளும், 300 வைத்தி யசாலைகளுக்கு உதவிகளும் வழங்க முடியும் என்றால் அநுரகுமார திஸா நாயக்காவுக்கு ஏன் வழங்க முடியாது. மக்கள் மீது உண்மையான பாசம் இருந்தால் ஏன் செய்யவில்லை.

இன்று அவர்களது தேர்தல் மேடைக ளைப் பாருங்கள். கோடி கோடியாக பணம் கொட்டுகிறார்கள். அப்படியான அநுரகுமாரவால் ஏன் ஒரு சின்ன உதவி யாவது மக்களுக்கு செய்ய முடியாமல் போனது. அநுரகுமார திஸ ாநாயக்க படித்த பாடசாலைக்கு சஜித் பிரேமதாஸதான் சிமாட் வகுப்பறையும் வழங்கி, பஸ்சும் வழங்கிய வரலாறு இருக்கிறது. படித்த வித்துவான்கள் சிலர் அவருக்கு பின்னால் திரிகிறார்கள். சீனாவைத் திரும்பிப் பாருங்கள் அங்கு முஸ்லிம்கள் நோன்பு பிடிக்க முடிகிறதா, தொப்பி போட முடிகிறதா, சுதந்திரமாக நடமாட முடிகிறதா. அதே நிலை இந்த நாட்டுக்குத் தேவையா?

அன்று கோட்டபாய முஸ்லிம்களின் வாக்கை கொள்ளையடிக்க அலிசப்ரி என்ற ஒருவரை கொண்டு திரிந்தார். அவர் கோட்டபாயவை புகழ்ந்து வாக்கை கொள்ளையடித்தார். கடைசியில் எமது மையத்துக்களை எரித்துக் கொண்டி ருந்த போதும், எம்மை சிறைக்குள் அடைத்த போதும் அமைச்சுப் பதவியை அலிசப்ரிக்கு கோட்டபாய வழங்கினார்.

அது போலவே அனுரவும் தொப்பி போட்ட முஸ்லிம் மௌலவி ஒருவரை கூட்டிக் கொண்டு திரிந்து வாக்கை கொள்ளையடிக்கப் பார்க்கிறார். அவர் முஸ்லிம் இளைஞர்களை பிழையாக வழிநடத்த முயல்கிறார். முஸ்லிம் தலைமைகளைப் பற்றி பேசுகிறார். நாம் என்ன செய்தோம் என்று அந்த மௌலவி கேட்கின்றார். நாம் என்ன செய்தோம் என்பதை எமது மக்களிடம் கேட்டுப் பாருங்கள். பல அபிவிருத்தி களையும், மீள்குடியேற்றத்தையும் செய்ததுடன் வேலை வாய்ப்புக்களையும் வழங்கியுள்ளோம்.

எமது வவுனியா, மன்னார், முல் லைத்தீவு மாவட்டங்களில் ஒருவரை ஒருவர் அரவணைக்கும் வகையில் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் மத்தி யில் ஒற்றுமையை ஏற்படுத்தியுள்ளோம். ஆகவே பொய்களை நம்பாதீர்கள்.

அதேபோல், ரணில் விக்கிரமசிங்க வுக்குப் பணத்துக்காகச் சோரம் போய் விடாதீர்கள். இந்த மாவட்டத்தில் 4 வருடமாக இராஜாங்க அமைச்சராக இருப்பவர் மக்களுக்கு ஒன்றுமே செய் யாது சோத்து பார்சலும் கொடுத்து 2000 ரூபா காசும் கொடுத்து மக்களை அழைத்து கொண்டு திரிகிறார். தரு வதை வாங்குங்கள். வாக்கை சஜித் பிரேமதாஸவுக்குப் போடுங்கள்.

தபால் மூல வாக்களிக்கும் போது அரச உத்தியோகத்தர்கள் சிந்தித்து வாக்களியுங்கள். உங்களுக்கான சம் பள உயர்வு, பதவி உயர்வு எல்லாம் எமது ஆட்சியில் நடைபெறும். எதிர் வரும் 21 ஆம் திகதி சஜித் பிரேமதாச வுக்கு வாக்களித்து இந்த நாட்டை மீட்டு எடுக்க அனைவரும் அணிதிரள்வோம்.– என்றார்.



# ஐஸ் போதைப் பொருளுடன் கைதான அரச உத்தியோகத்தரிடம் விசாரணை!

**(பாறுக் ஷிஹான்)**

சுமார் நாலரை லட்சம் ரூபா பெறுமதிமிக்க ஐஸ் போதைப் பொருளுடன் கல்முனைவிசேடஅதிரடிப்படையினரால் கைது செய்ப்பட்டுள்ள அரச உத்தியோகத்தரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படையின் விசேட தேர்ச்சி பெற்ற புலனாய்வு பிரிவின் தகவலுக்கமைய நீண்ட நாட்களாக சூட்சுமமான முறையில் ஐஸ் போதைப்பொருளை மோட்டார் சைக்கிளில் விநியோகம் செய்து வந்த குறித்த சந்தேக நபரை சாய்ந்தமருது பிரதான வீதியில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை (03) கைது செய்துள்ளனர்.

43 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் 25 கிராம் ஐஸ் போதைப் பொருளைப் பைகளில் உறையிடப்பட்டு மிக சூட்சுமமாக கடத்தி வந்த நிலையில் மோட்டார் சைக்கிளுடன் கல்முனை விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தில் சந்தேக நபர் சான்றுப் பொருளுடன் கல்முனை விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

இந்த நடவடிக்கையானது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எஸ்.பி குணசிறியின் அறிவுறுத்தலுக்கமைய மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர்களான சம்பத் குமார, இ.அசித ரணசூரிய ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ. டி.சி.எஸ்.ரத்நாயக்க தலைமையிலான அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டது.

# மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கௌரவம்






**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

யாழ்ப்பாணம் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் 1989 கா.பொ.த. சாதாரண தரம், 1992 க.பொ.த. உயர்தரம் கற்ற மாணவர்கள் ஒழுங்கு செய்திருந்த தங்களுக்கு கற்பித்த ஆசிரியர்களைக் கௌரவப்படுத்தும் “ வாழும்போதே வாழ்த்துவோம்” கௌரவிப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நூலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக கல்லூரி அதிபர் துரைரட்ணம் திலீப்குமார் கலந்து கொண்டார்.

இந்த மாணவர்களால் கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகள் நட்டு வைக்கப்பட்டன. 10 லட்சம் ரூபா பணமும் வழங்கி வைக்கப்பட்டது.

# நல்லெண்ண சந்திப்பு!



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் – கஹ்தானியை நல்லெண்ண சந்திப்பாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ், உதவிப்பணிப்பாளர் எம்.எஸ். அலா அஹமட் மற்றும் முஸ்லிம் திணைக்கள உத்தியோகத்தர் அஷ்ஷெய்க் எம்.எம்.எம். முப்தி முர்ஸி ஆகியோர் தூதுவரின் கொழும்பிலுள்ள உத்தியோக பூர்வ அலுவலகத்தில் சந்தித்தனர்.



# கழிவு முகாமைத்துவம் தொடர்பில் தெளிவுபடுத்தும் வேலைத் திட்டம்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

கழிவு முகாமைத்துவம் தொடர்பில் பெருந்தோட்ட மக்களுக்கு தெளிவுபடுத்தும் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த நுவரெலியா பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன் ஆரம்ப கட்ட நிகழ்வு தலவாக்கலை, லிந்துலை, மட்டுக்கலை தோட்டங்களில் இடம்பெற்றது.

இதில் பொலித்தீன், பிளாஸ்டிக் மற்றும் ஏனைய கழிவுகளை சேதமடையாத வகையில் முறையாக முகாமைத்துவம் செய்வது குறித்து தோட்டத் தொழிலாளர்களுக்கு விளக்கமளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சுற்றுச்சூழலில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருள்களை இடுவதால் சுற்றுச்சூழலில் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இது தொடர்பாக மக்களுக்கு விழிர்ப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தலவாக்கலை – லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி துரைராஜா றெய்ஷினி தலைமையில் விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.

தலவாக்கலை தோட்டக் கம்பனி, லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் நுவரெலியா பிரதேச சபையின் அதிகாரிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



## மத்திய அரசுக்கு

# வேடிக்கை!

## தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது குறித்து

## அறிக்கை வெளியிட்டுக் கண்டித்தார் இராமதாஸ்

தமிழக மீனவர்களை இலங்கை அரசு கைது செய்வதை மத்திய அரசு வேடிக்கைப் பார்க்கக்கூடாது என்று அன்புமணி இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

பா.ம.க. தலைவர் அன்புமணி இராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அதில் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

"வங்கக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கைக் கடற்படையினரால் கடந்த ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி கைது செய்யப்பட்ட தூத்துக்குடி மீனவர்கள் 22 பேரில் 12 பேருக்கு தலா 3.5 கோடி ரூபா (இந்திய மதிப்பு ஒரு கோடி ரூபா) அபராதம் விதித்து இலங்கை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அபராதத்தை செலுத்தத் தவறினால் மீனவர்கள் 6 மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.

மீதமுள்ள 10 மீனவர்கள் தொடர்பான வழக்கு எதிர்வரும் 10ஆம் திகதி விசாரணைக்கு வரும்போது அவர்களுக்கும் இதே தண்டனை வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக மீனவர்களை ஒடுக்கும் வகையிலான இந்த நடவடிக்கை கண்டிக்கத்தக்கது. மீனவர்கள் தொடர்ந்து ஓராண்டு சிறையில் அடைக்கப்பட்டால் அவர்களின் குடும்பம் பொருளாதார அடிப்படையில் எப்படியெல்லாம் பாதிக்கப்படும், மீன்பிடிப்பதை வாழ்வாதாரமாகக் கொண்ட மீனவர்களால் ஒரு கோடி ரூபா அபராதத்தை எவ்வாறு செலுத்த முடியும் என்பதை இலங்கை அரசு சிந்திக்க வேண்டும்.

வங்கக்கடலில் மீன்பிடிப்பதற்காக தமிழக மீனவர்களுக்கு எந்த வகையிலும் தண்டனை விதிக்க முடியாது என்பது தான் யதார்த்தம். இலங்கைக்கும் தமிழ் நாட்டுக்கும் இடையிலான கடற்பரப்பு மிகவும் குறுகியது. அதனால் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள்ளும் இலங்கை மீனவர்கள் இந்தியக் கடல் எல்லைக்குள்ளும் நுழைவதைத் தவிர்க்க முடியாது.

அதனால் தமிழக மீனவர்களும் இலங்கை மீனவர்களும் காலம் காலமாக எந்தெந்தப் பகுதிகளில் மீன் பிடித்து வந்தார்களோ, அதே பகுதிகளில் தொடர்ந்து மீன்பிடிக்க அனுமதிப்பதுதான் சரியானதாகும்.

பாரம்பரியமாக மீன் பிடிக்கும் பகுதிகளில் மீன் பிடித்தமைக்காக தமிழக மீனவர்களை இலங்கை அரசு கைது செய்வதையும், சிறையில் அடைப்பதையும் இந்திய அரசு வேடிக்கைப் பார்க்கக்கூடாது. மிகக்குறுகிய பரப்பளவைக் கொண்ட தமிழக - இலங்கைக் கடல் எல்லையை இரு தரப்பு மீனவர்களும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பகிர்ந்துகொண்டு மீன் பிடிப்பதுதான் இந்தச் சிக்கலுக்குத் தீர்வாகும்.

கடந்த காலங்களில் பலமுறை இத்தீர்வு முன்வைக்கப்பட்டது. இதை உணர்ந்துகொண்டு தமிழக மீனவர்கள், இலங்கை மீனவர்கள், தமிழக அரசு, இலங்கை அரசு ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கேற்கும் பேச்சுக்களுக்கு மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்." - இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.





# புரூனே மன்னர் – இந்தியப் பிரதமர் சந்திப்பு!

புரூனே சென்றுள்ள இந்தியப் பிரதமர் மோடி, அந்நாட்டு மன்னரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தியா – புரூனே இடையே தூதரக உறவு ஏற்பட்டு 40ஆவது ஆண்டு தற்போது கொண்டாடப்பட்டு வருகிறது. இதையொட்டி அரசு முறைப் பயணமாக இந்தியப் பிரதமர் மோடி நேற்று புரூனே நாட்டிற்குச் சென்றார்.

புரூனே தலைநகர் பந்தர் செரி பெகவானுக்குச் சென்ற பிரதமர் மோடிக்கு விமான நிலையத்ததில் உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.

பின்னர், புரூனே மன்னர் ஹாஜி ஹசனல் போல்கியாவை பிரதமர் மோடி சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது இருநாட்டு உறவு, வர்த்தகம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இரு நாட்டுத் தலைவர்களும் பேச்சு நடத்தினர்.

புரூனே பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் மோடி இன்று மாலை சிங்கப்பூர் செல்வார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மாலைப் பொழுதின் மயக்கத்தில்

## சிக்காக்கோ நகரில் சைக்கிளில் சென்ற தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின்






தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலை வாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்துடனும், மாநிலத்தில் தொழில் முதலீடுகளையும், வளர்ச்சியையும் மேம்படுத்துவதற்காகவும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அமெரிக்காவுக்கு அரசு முறை பயணம் சென்றுள்ளார்.

இதன்படி, சன்பிரான்சிஸ்கோவில் உலகின் முன்னணி தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன,

இதனைத் தொடர்ந்து சன்பிரான் சிஸ்கோவிலிருந்து நேற்று சிக்காக்கோ சென்றடைந்தார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.

இந்நிலையில், சிக்காக்கோவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பாட்டுப் பாடியபடி சைக்கிளில் பயணம் செய்தார். சிக்காக்கோ நகரின் முக்கிய வீதி மற்றும் கடற்கரையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சைக்கிள் ஓட்டிச் சென்று மாலைப் பொழுதை ரசித்தார்.

முதலமைச்சர் சைக்கிள் ஓட்டிய வீடியோ தற்போது வைரலாகி வருகிறது. இது குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "மாலைப் பொழுதின் அமைதி புதிய கனவுகளுக்கு களம் அமைக்கிறது" என்று தெரிவித்துள்ளார்.

பக்கங்கள் - 6

# கனடா முரசு

புதன்கிழமை 04/09/2024

## கத்திக்குத்தில் இருவர் காயம்

ஒன்ராரியோ, செப்ரம்பர் 04

கனடாவின் பார்க்டேல் பகுதியில் திங்கள் இரவு இடம்பெற்ற கத்திக் குத்துத் தாக்குதல் சம்பவத்தில் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர். C2 ▶





# ஒன்றாரியோவில் தேர்தல் இந்த ஆண்டில் இல்லை!

## முதல்வர் டக் ஃபோர்ட் தெரிவிப்பு

ஒன்றாரியோ, செப்ரம்பர் 04

இந்த ஆண்டு தேர்தல் நடைபெறாது என ஒன்றாரியோ முதல்வர் டக் ஃபோர்ட் தெரிவித்துள்ளார்.

ஆனாலும் 2025இல் தேர்தல் ஒன்று நடைபெறுமா என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கவில்லை.

ஒன்றாரியா மாகாணத்தின் அடுத்த நிர்ணயிக்கப்பட்ட தேர்தல் திகதி ஜீன் 2026 ஆகும்.

ஆனாலும் முன் கூட்டிய தேர்தல் குறித்த கேள்வியை டக் ஃபோர்ட் தொடர்ந்தும் தவிர்த்து வருகிறார்.

இந்த ஆண்டு தேர்தல் ஒன்று நடைபெறப் போவதில்லை என நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் கூறினார்.

தனது கட்சியின் மாகாண சபை உறுப்பினர்கள் மீண்டும் தேர்தலில் போட்டியிடும் முடிவை எதிர்வரும் டிசம்பர் மாத காலக் கெடுவுக்குள் எடுக்க வேண்டும் என டக் ஃபோர்ட் கோரியுள்ளார்.

டக் ஃபோர்ட் தலைமையிலான புரொக்ரசிவ் கன்சர்வேட்டிவ் அரசாங்கம் 78 மாகாண சபை உறுப்பினர்களை கொண்டுள்ளது.

# லிபரல் - புதிய ஜனநாயகக் கட்சி நம்பிக்கை ஒப்பந்தம் சாத்தியம்?



கியூபெக், செப்ரம்பர் 04

ஒட்டாவாவில் உள்ள லிபரல் கட்சியினருடன், புதிய ஜனநாயகக் கட்சியின் நம்பிக்கை ஒப்பந்தம் தொடர்பில் அடுத்த வாரம் மொன்ரியலில் நடைபெறும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் கவனம் செலுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சந்திப்பின் போது ரயில் பாதைகளில் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பிணைப்பு நடுவர் மன்றத்தை கட்டாயப்படுத்தும் லிபரல்கட்சியினரின் முடிவுகுறித்து கலந்துரையாடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. C2 ▶




# மொன்றியல் பொலிஸ் செயல்பாடு: கியூபெக் உயர்நீதிமன்றில் தீர்ப்பு!

**கியூபெக், செப்ரம்பர் 04**

மொன்றியல் பொலிஸ் படையில் இன விவரக்குறிப்பு ஒரு முறையான பிரச்சினையாகும் எனவும், இதனால் பாதிக்கப்பட்டவர்கள் இழப்பீடு பெற வேண்டும் என்று கியூபெக் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மொன்றியல் நகரம் அதன் பொலிஸ் அதிகாரிகள் தங்கள் கடமைகளை நிறைவேற்றும் இனரீதியான விவரக் குறிப்புக்கு பொறுப்பாகும் எனவும், மேலும் உறுப்பினர்களால் பாதிக் கப்பட்ட சேதங்களை திருப்பிச் செலுத்த வேண்டும் எனவும் நீதிபதி டொமி னிக் பவுலின் ஒரு தீர்ப்பில் குறிப்பிட்டுள் ளார்.

கியூபெக்கின் கறுப்புக் கூட்டணி யால் இந்த வழக்கு கொண்டுவரப்பட்டது.

இந்த வழக்கின் முதன்மை வாதியான அலெக்ஸாண்ட்ரே லாமொன்டாக்னே, 2017 ஆம் ஆண்டில் பழைய மொன்றியல் பட்டியில் இருந்து வெளி யேறும் போது மொன்றியல் பொலி ஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டு, தரை யில் பொருத்தப்பட்டு, கைவிலங்கிடப் பட்டு நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

நேற்றைய தீர்ப்பின் மூலம், லாமொன் டேக்னே 5,000 டொலர்களைப் பெறு வார்.

---

**லிபரல் - புதிய...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

கனேடிய பசிபிக் கன்சாஸ் சிட்டி மற்றும் கனேடிய தேசிய ரயில்வே வேலை நிறுத்தம் தோல்வியடைந்த பின்னர் தங்கள் தொழிலாளர்களை அடைத்து விட்ட 24 மணி நேரத்திற்குள் பிணைப்பு மத்தியஸ்தத்தை விதிக்குமாறு தொழி லாளர் அமைச்சர் ஸ்டீவ் மெக்கின்னன் கனடா தொழில்துறை உறவுகள் வாரி யத்திற்கு உத்தரவிட்டார். அதை அடுத்து புதிய ஜனநாயகக் கட்சி ஒப்பந்தத்தை மறுமதிப்பீடு செய்து வருகிறது என கட்சி யின் தொழிலாளர் விமர்சகர் மேத்யூ கிரீன் கூறியுள்ளார்.

நாடாளுமன்றம் செப்ரம்பர் 16ஆம் திகதி மீண்டும் தொடங்குவதற்கு முன், மொன்றியலில் புதிய ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் கூடி தங்கள் வீழ்ச்சி உத்தி யைத் திட்டமிடும்போது, ஒப்பந்தத்தின் எதிர்காலம் முன் மற்றும் மையமாக இருக்கும் என்பது இப்போது தெளி வாகிறது.

கனடாவின் ஒரே தொழிலாளர் கட்சி என்பதால், தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் மற்றும் 'இந் தப் பொருளாதாரத்தில் போராடும்' பிறருக்கு ஆதரவு இருப்பதை உறுதி செய்ய 'தைரியமான நடவடிக்கை களை' எடுக்க வேண்டிய பொறுப்பு புதிய ஜனநாயகக் கட்சிக்கு உள்ளது என கிரீன் தெரிவித்துள்ளார்.

---

**கத்திக்குத்தில்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

குயின்ஸ் வீதி மற்றும் லேண்ட்ஸ் டவுன் வீதி என்பவற்றுக்கு அருகாமை யில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

தாக்குதல் சம்பவம் ஒன்று குடியி ருப்பு தொகுதி ஒன்றில் இடம்பெற்ற தாக பொலிஸாருக்கு முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது.


இந்த முறைப்பாட்டை தொடர்ந்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென் றுள்ளனர்.

இதன்போது இரண்டு பேர் கத்திக் குத்து தாக்குதலுக்கு இலக்காகி, காய மடைந்த நிலையில் இருந்தமையைப் பொலிஸார் அவதானித்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்களை பொலிஸார் வைத்தியசாலையில் சேர்த் துள்ளனர்.

இருவருக்கும் உயிர் ஆபத்து கிடை யாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த கத்திக்குத்து தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந் தால் பொலிஸாருக்கு அறிவிக்கு மாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# சட்டமன்ற உறுப்பினர்களை தேர்தலுக்காக தமது பக்கம் இழுக்கும் கன்சர்வேட்டிவ்கள்

பிரிட்டிஷ் கொலம்பியா, செப்ரம்பர் 04

முந்தைய கன்சர்வேடிவ் வேட்பாளர் பட்டியலை மாற்றியமைத்து, கன்சர்வேடிவ்கள் மேலும் மூன்று பிரிட்டிஷ் கொலம்பியா (பி.ஸி.) யுனைடெட் சட்டமன்ற உறுப்பினர்களைத் தங்கள் பதாகையின் கீழ் வரும் மாகாணத் தேர்தலில் போட்டியிட நியமித்துள்ளனர்.

கன்சர்வேடிவ் தலைவர் ஜோன் ருஸ்டாட் நேற்று வெளியிட்ட அறிக்கையில், இயன் பாட்டன், பீட்டர் மிலோபார் மற்றும் ட்ரெவர் ஹால்ஃபோர்ட் ஆகியோர் தனது கட்சியில் இணைகின்றனர் எனக் கூறினார்.

டெல்டா தெற்கைப் பிரதிநிதித்துவபடுத்தும் பாட்டன் மற்றும் சர்ரே-ஒயிட் ராக்கின் சட்டமன்ற உறுப்பினராக இருக்கும் ஹால்ஃபோர்ட் ஆகியோர் அந்த ரைடிங்கில் தொடர்ந்து நிற்பார்கள்.




# ரொறன்ரோ நகரில் ஒருவர் துப்பக்கிச் சூட்டுக்குப் பலி!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 04

கனடாவின் ரொறன்ரோ நகரில் கடந்த ஞாயிறு இரவு இடம் பெற்ற மற்றுமொரு துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் நபர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.


பிளாக் கிரிக் மற்றும் பிரீத் பகுதியில் இந்த துப்பாக்கி சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூடு தொடர்பில் அறிந்து கொண்ட பொலிஸார் சம்பவ இட இடத்திற்கு விரைந்து காயமடைந்த நபரை காப்பாற்ற முயற்சித்துள்ளனர்.

எனினும் இந்த முயற்சியை வெற்றி அளிக்கவில்லை எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவ இடத்திலேயே அந்த நபர் உயிரிழந்துள்ளார்.

சந்தேக நபர் வாகனம் ஒன்றில் தப்பிச் சென்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் சிசிடிவி காணொளிகள் திரட்டப்பட்டு வருகின்றன எனவும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன் அடிப்படையில் சந்தேக நபர் பற்றிய தகவல்களை எதிர்வரும் நாள்களில் வெளியிட முடியும் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.




# அயலவர் மீது வழக்குத் தொடுத்தவருக்கு அபராதம் விதித்த கனடியத் தீர்ப்பாயம்!

பிரிட்டிஷ் கொலம்பியா, செப்ரம்பர் 04

வீட்டின் மேல் மாடியில் வசிக்கும் குடியிருப்பாளர்களுக்கு எதிராக நட்டஈடு கோரிய வழக்கு தொடர்ந்த பெண், அபராதம் செலுத்த நேரிட்டுள்ளது.

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் லிண்டா யூ என்ற பெண் வீட்டின் மேல் மாடியில் தங்கி இருந்த லொரென்ஸோ புருனோ என்ற அயலவர் மீது வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

மேல் மாடியில் வசிப்பவர்கள் அதிக சத்தம் எழுப்புவதனால் தமக்கு பாதிப்பு ஏற்பட்டதாகவும் மருத்துவ செலவுகளை எதிர்கொள்ள நேரிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனால் தமக்கு நட்ட ஈடாக 5000 டொலர்கள் வழங்க வேண்டும் என வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் சிவில் தீர்ப்பாயத்தில் இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தது.

5000 டொலர் நட்டஈடு கோரி வழக்கு தாக்கல் செய்த லிண்டா வூ, வீட்டின் மேல் மாடியில் குடியிருக்கும் புருனோவிற்கு நட்ட ஈடாக 50 டொலர்களை செலுத்துமாறு தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

லின்டாவினால், புருனோவிற்கு எதிராக 300 முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேல் மாடியில் தங்கி இருப்பவர்கள் தளவாடங்களை இழுப்பதன் மூலமாகவும், விருந்தினர்களை அழைத்து பேசுவதன் மூலமாகவும் இலத்திரனியல் சாதனங்களை பயன்படுத்தும் போதும் இவ்வாறு சத்தம் எழுவதாகவும் இது தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனவும் லிண்டா தெரிவித்திருந்தார்.

லிண்டா சத்தம் எழுவதாக பதிவு செய்து நீதிமன்றிற்கு வழங்கிய ஒலிப்பதிவுகளிலும் பாரிய சத்தம் எதுவும் கேட்கவில்லை என தீர்ப்பாயம் சுட்டிக்காட்டியுள்ளது.

புருனோ சத்தம் எழுப்புவதாக கூறி லிண்டா பதிலுக்கு சத்தம் எழுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

லிண்டா சத்தம் எழுப்பியது தொடர்பிலான ஆதாரங்கள் நிரூபிக்கப்படாததன் காரணமாக புருனோவிற்கு 50 டாலர்கள் செலுத்துமாறு லிண்டாவிற்கு தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.



# ஒன்றாரியோவில் வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்த பெண்ணுக்குக் காத்திருந்த அதிர்ச்சி



கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் வீடு ஒன்றை வாடகைக்கு அமர்த்திய பெண் பெரும் நெருக்கடி நிலைக்கு உள்ளாக நேரிட்டுள்ளது.

தங்கியிருக்க முடியாத நிலையிலான வீடொன்றுக்கு ஆறு மாத காலமாக அந்தப் பெண் வாடகை செலுத்தி வருகிறார் எனத் தெரிவிக்கின்றார்.

லின்ட்ஸே மெகார்த்தி என்ற மூன்று பிள்ளைகளின் தாய்க்கே இக்கதி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீட்டின் பல்வேறு இடங்களில் பூஞ்சணம் காணப்படுவதாக அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

வீட்டில் கறுப்பு நிறத்தில் படிந்துள்ள பொருள் என்ன என்பது தொடர்பில் அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையின் போது இது பூஞ்சணம் எனக் கண்டறியப்பட்டது.

இந்த பூஞ்சண வகை மிகவும் நச்சுத்தன்மையுடையது என தெரிவிக்கப்படுகிறது.

அதனால் இந்த வீட்டில் வாழ முடியாத நிலை காணப்படுவதாக அந்தப் பெண் தெரிவிக்கின்றார்.

வீட்டின் வாகன தரிப்பிடம், குளியலறை, சமையலறை போன்ற பல்வேறு இடங்களில் பூஞ்சண வகையை காண முடிவதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் சோதனை நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நோய் எதிர்ப்பு சக்தி குறைந்த தமக்கும் தமது ஒரு மகளுக்கும் இந்த பூஞ்சணம் ஆபத்து ஏற்படுத்தும் என அவர் அச்சம் வெளியிட்டுள்ளார்.

அந்த வீட்டில் சில நிமிடங்கள் கூட தங்கியிருக்க முடியாத நிலை காணப்படுவதாகவும் வீட்டில் இருந்த போது தமது நாக்கு மற்றும் தொண்டை பகுதி வீக்கம் அடைந்தன எனவும், உடலில் அரிப்பு தன்மை ஏற்படுவதாகவும் மெக்கார்த்தி தெரிவிக்கின்றார்.

வீட்டில் சில நாட்கள் தங்கி இருந்த போது தாம் கடுமையாக நோய்வாய்ப்பட்டார் என அவர் தெரிவிக்கின்றார்.

இந்த விடயம் குறித்து வீட்டு உரிமையாளர்களிடம் பேசியபோது ஆரம்பத்தில் உதவுவார் எனக் கூறிய போதிலும் பின்னர் அவர் உதவ மறுத்து விட்டார் என மெகார்த்தி குற்றம் சுமத்தியுள்ளார்.

தற்பொழுது இந்த வீட்டை விட்டு வேறு ஒரு அறையில் சிறிய இடத்தில் தங்கியிருக்கின்றார் எனவும் வீட்டு உரிமையாளர்கள் உரிய உதவிகளை வழங்க தவறியுளனர் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இது தொடர்பில் தாம் வீட்டு உரிமையாளர் மற்றும் வாடகை குடியிருப்பாளர் சபையில் முறைப்பாடு செய்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.



# கனடாவின் விவசாய, உணவு உற்பத்தித் துறைகள் சைபர் தாக்குதலுக்கு இலக்காகும் அச்சுறுத்தல்!

கனடாவின் விவசாய மற்றும் உணவு உற்பத்தி துறைக்கு சைபர் தாக்குதல் தொடர்பில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் துறைகள் தொடர்பில் போதிய அளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாத காரணத்தினால் இலகுவில் அவை இலக்கு வைக்கப்படலாம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விவசாய செய்கை, முதல் உணவு உற்பத்தி, விநியோகம், மளிகை பொருள் மற்றும் உணவுப் பொருள் விற்பனை செய்தல் உள்ளிட்ட பல்வேறு படிமுறைகளில் இவ்வாறு சைபர் தாக்குதல் நடத்தப்படக் கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2022 ஆம் ஆண்டு சோபேஸ் நிறுவன வாடிக்கையாளர்கள் சைபர் தாக்குதல் காரணமாக பாதிக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு உணவு அல்லது விவசாய துறை சார் சைபர் தாக்குதல்களினால் அதிகமாக வாடிக்கையாளர்களே பாதிக்கப்படுவர் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டியது அவசியமானது எனச்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# சம்சுங் இலத்திரனியல் அடுப்புக்களை சந்தையில் இருந்து மீளப் பெற முடிவு

கனடாவில் சம்சுங் ரக இலத்திரனியல் அடுப்புக்கள் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அடுப்பு வகையை பயன்படுத்தும் மக்கள் தீ விபத்துக்கு உள்ளாவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கனடாவில் சில அடுப்புகளில் தன்பாட்டில் தீப்பற்றி கொண்டதில் சிலர் காயமடைந்துள்ளனர்.

சுகாதார நிறுவனம் இந்த அடுப்பு வகைகளை சந்தையில் இருந்து மீள பெற்றுக் கொள்ளுமாறு நிறுவனத்திற்கு அறிவித்துள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் வரையில் விற்பனை செய்யப்பட்ட சுமார் 3,26,250 அடுப்புக்கள் இவ்வாறு பாதிப்பை எதிர்நோக்குகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.


இந்த அடுப்புக்களின் எரியும் பகுதி தானாக இயங்குவதால் விபத்துக்கள் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

எனவே இந்த அடுப்பு வகைகளை சந்தையில் இருந்து மீள பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தீ பற்றிக் கொள்வதைத் தவிர்க்கும் நோக்கில் சம்சுங் நிறுவனம் வாடிக்கையாளர்களுக்கு விசேட கருவிகளை வழங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

அடுப்புக்கள் தானாக தீப்பற்றி கொண்ட 57 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

விபத்துக்கள் காரணமாக ஏழு பேர் இதுவரையில் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.



# ஒன்றாரியோ வகுப்பறைகளில் அலைபேசிகளின் பயன்பாட்டுத் தடைக்கு எழுந்துள்ள விமர்சனங்கள்

கனடாவின் ஒன்றாரியோ மாகாண பாடசாலைகளில் அலைபேசி பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்ட விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வாரம் முதல் இந்தர் தடை அறிமுகம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், இந்த தடை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் என்பது குறித்து தெளிவாக அறிவுறுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வகுப்பறையில் கற்கும் போது மாணவர்கள் கவனம் சிதறுவதை தடுக்கும் நோக்கில் இவ்வாறு அலைபேசி பயன்பாட்டுக்கு தடை விதிப்பதாக மாகாண அரசாங்கம் அறிவித்துள்ளது.

வகுப்பறைகளில் அலைபேசி பயன்படுத்துவது தடை செய்யும் அறிவிப்பு வரவேற்கப்பட வேண்டியது என ஆசிரியர் ஒன்றியங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் இந்த நடைமுறை தொடர்பில் தெளிவான நியமங்கள், வரையறைகள் விதிக்கப்பட வேண்டியது அவசியம் என ஆசிரிய தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

அனேகமான பாடசாலைகளில் அதிபர்களுக்கு இந்த தடை தொடர்பில் போதிய அளவு தெளிவு கிடையாது எனவுன் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வகுப்பறையில் அலைபேசி பயன்படுத்தும் மாணவர்களின் அலைபேசியை கையகப்படுத்த நேரிட்டால் அதை என்ன செய்வது என்பது குறித்து தெளிவான அறிவுறுத்தல்கள் கிடையாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது ஆசிரியர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.